DEPOSITION OF WITNESS
(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM
C.C.No.91-2021
DW - 2

| | | |
|---|---|---|
| Name | : | செங்கோடன் |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 09.06.2026**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் ஆண்டலூர்கேட்டில் குடியிருந்து உதவி வேளாண்மை அலுவலராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் நல்லிபாளையம் காவல்நிலையத்தில் இருந்து எனது அலுவலகத்திற்கு காவலர்கள் வந்து என் மீது இந்நீதிமன்றத்தில் பிடியாணை பிரப்பிக்கப்பட்டிருப்பதாக கூறினார்கள். நான் என்னவென்று கேட்டபோது காவலர்கள் குணாநிதி என்பவர் என் மீது இந்நீதிமன்றத்தில் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கில் பிடியாணை பிரப்பிக்கப்பட்டிருப்பதாக கூறினார்கள். பின்பு ஒரு வாரம் கழித்து நான் சேந்தமங்கலம் காந்திபுரத்திற்கு கட்டிட ஆய்வுக்காக வந்திருந்தபோது குணாநிதி என்பவர் சுமார் 10 நபர்களுடன் வந்து எனது இருசக்கர வாகனத்தை வழிமறித்தார்.

மேற்படி நபர்கள் என்னை சேந்தமங்கலம் காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள். அங்கு மேற்படி பிடியாணையின் பேரில் என்னை கைது செய்து என்னை இந்நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார்கள். பின்பு அடுத்தநாள் நான் மேற்படி வழக்கில் பிணையதாரர்களை முன் நிறுத்தி வழக்கை நடத்தி வருகிறேன்.

இவ்வழக்கின் வழக்கு காசோலையை நான் புகார்தாரரிடம் கொடுக்கவில்லை.

நான் என்னுடன் வேலைபார்க்கும் பெரியசாமி என்பவருடன் வரவு செலவு செய்து வந்து அதற்கு ஆதரவாக இவ்வழக்கு காசோலையை பெரியசாமியிடன் கடந்த 2019ம் வருடம் கொடுத்திருந்தேன். மேற்படி பெரியசாமியும் குணாநிதியும் நண்பர்கள் ஆவார்கள். குணாநிதி TNPSC தேர்வில் முறைகேடாக தேர்ச்சி பெறவேண்டி பெரியசாமியிடம் ரூ.2,00,000/- பணம் கொடுத்திருந்தார். அது பற்றி பெரியசாமி என்னிடம் சொல்லி இருந்தார்.

மேற்படி பெரியசாமி சாலைவிபத்தில் இறந்துவிட்டார். நான் பெரியசாமியிடம் கொடுத்திருந்த காசோலையை புகார்தாரர் குணாநிதி பெரியசாமியிடம் கொடுத்த பணத்திற்கு ஆதரவாக பெரியசாமியிடம் இருந்து பெற்றுக்கொண்டார். புகார்தாரர் எனக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் 26.07.2021ம் தேதி நான் கோயமுத்தூரில் ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் உதவி வேளாண்மை அலுவலராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 2021 ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஜீலை மாதம் வரையிலான Pay Slip க்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். **(2021** ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஜீலை மாதம் வரையிலான **Pay Slip** எண்ணிக்கை **- 4** நகல் எ**.**சா**.**ஆ**.1** ஆக புகார்தாரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது**.)**

நான் கோயமுத்தூரில் வேலைசெய்து வந்த சமயத்தில் எனக்கு நாமகிரிபேட்டைக்கு ஒழுங்கு நடவடிக்கையாக பணி மாறுதல் செய்யப்பட்டேன். **(**எதிரியின் மீதான ஒழுங்கு நடிவடிக்கையின் காரணமாக எதிரி பணிமாறுதல் செய்யப்பட்டதற்கான செயல்முறை ஆணை அசல் **-** எ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** எனது ஆதார் அட்டை நகலை தாக்கல் செய்கிறேன். **(**எதிரியின் ஆதார் அட்டை நகல் **(**அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது**.)** எ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)**

புகார்தாரரை எனக்கு நேரடியாக தெரியாது. புகார்தாரரின் வீடு எங்கு அமைந்துள்ளது என்று எனக்கு தெரியாது. நான் புகார்தாரரிடம் ரூ.7,00,000/- பணம் வாங்கவில்லை. என் மீது புகார்தாரர் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார். காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. புகாரை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எனது சொந்த ஊர் நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், நாமக்கல் டவுன் கொண்டி செட்டிபட்டியாகும். நான் எனது சொந்த ஊரில் எவ்வளவு நாட்களாக வசித்து

வருகிறேன் என்றால் 2001ம் வருடம் முதல் நாளது வரை அங்குதான் வசித்து வருகிறேன். தற்போது நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் இராசிபுரம் ஆண்டலுார்கேட்டில் குடியிருக்கிறேன். எவ்வளவு நாட்களாக ஆண்டலுார்கேட்டில் குடியிருக்கிறேன் என்றால் சுமார் ஒரு வருடாமாக குடியிருந்து வருகிறேன்.

நான் எப்போது அரசு பணியில் சேர்ந்தேன் என்றால் 22.02.2011ம் தேதி பணியில் சேர்ந்தேன். எந்த ஊரில் பணியில் சேர்ந்தேன் என்றால் நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலுாரில் பணியில் சேர்ந்தேன். பரமத்திவேலுாரில் இருந்து எங்கு பணிமாற்றம் செய்யப்பட்டேன் என்றால் நாமக்கல்லுக்கு பணிமாற்றம் செய்யப்பட்டேன். நாமக்கல்லில் எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை பணிபுரிந்தேன் என்றால் 2013 முதல் 2015ம் ஆண்டு வரை நாமக்கல்லில் பணிபுரிந்தேன். பின்னிட்டு எங்கு பணிமாறுதல் செய்யப்பட்டேன் என்றால் இராசிபுரம்த்திற்கு பணிமாறுதல் செய்யப்பட்டேன். இராசிபுரத்தில் எந்த ஆண்டு வரை பணியில் இருந்தேன் என்றால் 2016ம் ஆண்டு வரையில் இருந்தேன்.

கோயமுத்துாருக்கு எந்த ஆண்டு பணிமாறுதல் பெற்றேன் என்றால் 2018ம் ஆண்டு இறுதியில் தான் சென்றேன். கோயமுத்துாருக்கு பணிமாறுதல் செய்யப்படுவதற்கு முன்பு நான் எங்கு பணிபுரிந்தேன் என்றால் நாமகிரிபேட்டையில் பணிபுரிந்தேன். கோயமுத்துாரில் நான் எங்கு எப்போது பணியாற்றினேன் என்றால் ஆர்.எஸ்.புரத்தில் 2018 முதல் 2021ம் ஆண்டு டிசம்பர் 5ம் தேதி வரை அங்கு பணியாற்றினேன். கோயமுத்துாரில் பணியாற்றியபோது நான் எத்தனை நாட்களுக்கு ஒரு முறை நான் எனது சொந்த ஊருக்கு வருவேன் என்றால் விழா சமயங்களில் ஊருக்கு வருவேன்.

உழவர் சந்தையில் எனது பணி நேரம் காலை 04.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை இருக்கும். மதியம் 01.00 மணிக்கு பணி முடிந்த பின்னர் அடுத்த நாள்தான் பணிக்கு வரவேண்டுமா என்றால் அன்றைய தினமே மாலை 05.00 மணிக்கு காய்கறிகளின் வெளி சந்தை விலை குறித்து தெரிந்துகொள்ள வரவேண்டும். மாலை 05.00 மணிக்கு நான் உழவர் சந்தைக்கு வருவது எனது அலுவலக பணி இல்லை என்றால் சரியல்ல. மேற்படி 05.00 மணிக்கு நான் உழவர் சந்தைக்கு வரும்போது வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்வேனா என்றால் இல்லை.

நான் தினசரி காலையில் உழவர் சந்தைக்கு வேலைக்கு வரும்போது மட்டும்தான் வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். எனது சம்பளம் எனது

எந்த வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் என்றால்  ஸ்டேட் பேங்க் வங்கி சத்தியமங்கலம் கிளையில் உள்ள வங்கி கணக்கு ஆகும். சத்தியமங்கலமானது எந்த மாவட்டத்தில் உள்ளது என்றால் ஈரோட்டில் உள்ளது. மேற்படி வங்கி கணக்கை எந்த வங்கி கிளையில் தொடங்கினேன் என்றால் நாமக்கல் மாவட்டம் மோகனூர் கிளையில் தொடங்கினேன். எனது சொந்த கடனுக்காக சத்தியமங்கலம் கிளைக்கு மாற்றினேன். எந்த வருடம் மாற்றினேன் என்றால் 2018ம் வருடம் மாற்றினேன். நான் எனது வங்கி கணக்கை மோகனூர் கிளையில் இருந்து சத்தியமங்கலம் கிளைக்கு மாற்றம் செய்தபோது மோகனூர் கிளையில் எனக்கு வழங்கப்பட்ட காசோலைகளை மோகனூர் வங்கி கிளையில் திரும்ப ஒப்படைத்தேனா என்றால் இல்லை.

நான் வழக்கு காசோலையை கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் எனது வழக்கறிஞர் நகலை காட்டினார். வழக்கு காசோலையை ஆய்வு செய்வதற்காக எனது தரப்பில் மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. புகார்தாரர் பெரியசாமிக்கு பணம் கொடுத்தது குறித்து எப்போது என்னிடம் தெரிவித்தார் என்றால் சுமார் 3 வருடத்திற்கு முன்பு கூறினார். பெரியசாமி புகார்தாரரை பற்றி கூறியபோது புகார் தாரரை பற்றி தெரிந்துகொண்டேன் என்றால் புகார்தாரரின் பெயர் மட்டும் எனக்கு தெரியும். மேற்படி பெரியசாமி வேளாண்மை துறையில் என்னைபோன்ற ஊழியர் என்றால் சரிதான்.

மேற்படி பெரியசாமியை எனக்கு எத்தனை நாட்களாக தெரியும் என்றால் நான் வேலைக்கு சேர்ந்ததற்கு பின்னிட்டு இரண்டு மாதங்கள் கழித்து எனக்கு தெரியும். அப்போதில் இருந்து எனக்கு தெரியும். பெரியசாமிக்கு புகார்தாரர் எதற்காக பணம் கொடுத்தார் என்பது பற்றி பெரியசாமி என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். பெரியசாமிக்கு எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் சேந்தமங்கலத்தை சேர்ந்தவர். பெரியசாமியின் குடும்பத்தாரை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

இவ்வழக்கு சம்மந்தமாக கடந்த 12.12.2022ம் தேதி எனது வேளாண்மை உதவி இயக்குனர் மூலமாக எனக்கு அழைப்பானை அனுப்பப்பட்ட விபரம் குறித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. எனக்கு உதவி இயக்குனர் யாரும் இல்லை. நான் எப்போது வரை கோயமுத்தூரில் பணிபுரிந்தேன் என்றால் 05.12.2021ம் தேதி வரை அங்குதான் இருந்தேன். எனக்கு விழாக்கால முன்பணமாக எவ்வளவு கிடைக்கும் என்றால் ரூ.3,000/- கிடைக்கும்.  எ.சா.ஆ.1 Pay Slip களில் விழக்கால முன்பணம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி மீண்டும் விழக்கால முன்பணம் ரூ.10,000/- எனவும் போனஷ் ரூ.3,000/- எனவும் கூறுகிறார். நான் விழக்கால

முன்பணத்தை எதற்காக வாங்குவேன் என்றால் குடும்ப தேவைக்காக வாங்குவேன்.

புகார்தாரர் எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பானது Not Claimed என காரணம் கூறி திருப்பப்பட்டுள்ள விபரத்தை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வக்காலத்தில் குறிப்பிடப்பட்டள்ள கையொப்பம் என்னுடையததான் என்றால் சரிதான். ம.சா.ஆ.1 காசோலை மோகனூர் கிளையில் எனது வங்கி கணக்கிற்கு வழங்கப்பட்ட காசோலை என்றால் சரிதான். ம.சா.ஆ.1 காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். ஆனால் அதில் நிரப்பப்பட்டுள்ள பிற சங்கதிகள் என்னுடைய கையொழுத்து இல்லை. காசோலையை பிற நபர் மூலம் நிரப்பி கையொப்பம் மட்டும் செய்து நான் புகார்தாரர் இடம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் பெரியசாமியிடம் கொடுத்த காசோலையை புகார்தாரர் பெற்று என் மீது மோசடியாக வழக்கு தாக்கல் செய்துள்ளது எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் இந்நீதிமன்றத்தில் என் மீது பிறப்பிக்கப்பட்ட பிடியாணை சம்மந்தமாக போலிசார் என்னை வந்து பார்த்தபோது தெரியவந்தது. கடந்த 12.08.2025ம் தேதி என்னை மேற்படி பிடியாணையின் பேரில் போலிசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள் என்றால் சரிதான். அன்றைய தேதியில் நான் நீதிமன்றத்தில் புகார்தாரருக்கு வழக்கு காசோலை தொகையை ஒரு வாரத்தில் செலுத்தி விடுவதாக கூறினேன் என்றால் பயத்தில் எழுதி கொடுத்தேன்.

பெரியசாமி என்ற ஒரு நபர் இருந்தது குறித்து புகார்தாரருக்கு தெரியாது என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் நான் பணம் பெற்றுக்கொண்டு அதற்கு ஆதரவாக காசோலையை கொடுத்துவிட்டு தற்போது புகார்தாரருக்கு பணம் கொடுக்ககூடாது என மோசடியாக வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் புகார்தாரரிடம் பெற்ற கடனை திருப்பி கொடுக்காததால் நான் தண்டனைக்குறிய குற்றம் புரிந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் காசோலை தொகையை அபராத தொகையாக நீதிமன்றத்தில் செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**